செ.வெ.எண். 13 நாள். 5.01.2010

<u>செய்தி வெளியீடு</u>

**<u>கோவையில் நடைபெறவுள்ள "உலகத் தமிழ் செம்மொழி மாநாடு–2010" தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள "கலைநிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாக் குழுவின்" முதல் கலந்தாய்வுக் கூட்டம், இன்று (5.01.2010) சென்னை–தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.</u>**

இன்று (5.01.2010) சென்னை–தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு என்.சுரேஷ் ராஜன் அவர்களின் தலைமையில், கோவையில் நடைபெறவுள்ள "உலகத் தமிழ் செம்மொழி மாநாடு–2010" தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள "கலைநிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலாக் குழுவின்" முதல் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி, பாராளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி, குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள் – செல்வி கே.பாலபாரதி,எம்.எல்.ஏ., திருமதி பெ.கமலாம்பாள்,எம்.எல்.ஏ., திருமதி ஜோன்ஸ் ரூசோ, கவிஞர் சல்மா என்கிற ரொக்கையா, கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் ஆணையர் திரு ப.அ.மணி, இ.வ.ப., உறுப்பினர்கள் – சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆணையர் டாக்டர் ஆ.சித்தரஞ்சன் மோகன்தாஸ், இ.ஆ.ப., கோவை–தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஜி.பால்ராஜ், சென்னை சாந்தோம் கலைத் தொடர்பு நிலைய தந்தை வின்செண்ட் சின்னதுரை, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்–கவிஞர் இளையபாரதி, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு மு.இராமசாமி, கூத்துப்பட்டறை திரு நா.முத்துசாமி, திருச்சி கலைக் காவிரி–முனைவர் மார்கரெட் பாஸ்டின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9